www.Padasalai.Net

நம்ம School – நம்ம ஊரு பள்ளி
உறுப்பினர் செயலாளரின் செயல்முறைகள்,
பிறப்பிப்பவர். திரு.இரா. சுதன், இ.ஆ.ப (ஓய்வு),
ந.க.எண்:720 /J1/நஊப/2024 நாள்: 26.04.2024

**பொருள்:** பள்ளிக் கல்வித் துறை - **நம்ம School நம்ம ஊரு பள்ளி** - பொதுமக்கள், முன்னாள் மாணவர்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், பெரு, சிறு மற்றும் குறு நிறுவனங்களின் சமூக பங்களிப்பு நிதியின் மூலம் பெறப்பட்ட நிதி - பொருட்கள் கொள்முதல் செய்ய நிதி விடுவிக்கப்பட்டுள்ளது - துரித நடவடிக்கை மேற்கொண்டு செலவினம் மேற்கொள்ள தக்க அறிவுரைகள் வழங்குதல் - சார்பு.

பார்வை:
1. நம்ம School நம்ம ஊரு பள்ளி நிர்வாகக் குழுவின் நான்காவது கூட்ட நிகழ்வுகள் நாள். 15.02.2024
2. இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண்:607 /J1/நஊப/2023 நாள்: 11.03.2024

......

**நம்ம School–நம்ம ஊரு பள்ளி**

"**நம்ம School – நம்ம ஊரு பள்ளி**" என்ற ஒரு புதிய முயற்சியானது, பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் அரசுப் பள்ளிகளின் மேம்பாட்டிற்காக பொதுமக்கள், முன்னாள் மாணவர்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், பெரு, சிறு மற்றும் குறு நிறுவனங்களின் சமூக பங்களிப்பு நிதி, பொருட்கள் மற்றும் சேவைகள் பெற உருவாக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக சேகரிக்கப்படும் நிதியானது, தமிழகத்தில் உள்ள 37,558 அனைத்து வகை அரசுப் பள்ளிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழிவகை செய்கிறது.

2. மேற்காண் பங்களிப்புகளைப் பெற, மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களால் 19.12.2022 அன்று "**நம்ம School – நம்ம ஊரு பள்ளி**" என்ற தனி இணையதளம் (https://nammaschool.tnschools.gov.in/#/) தொடங்கப்பட்டு, அதற்கென தனி வங்கிக் கணக்கு உருவாக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

3. இந்த இணையதளம் வாயிலாக பெறப்படும் நிதியானது வெளிப்படைத்தன்மையுடன் செலவினம் மேற்கொள்ளப்படுவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான குழு (District Level Committee) உருவாக்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. மேலும், பள்ளி அளவில் மேற்கொள்ளப்படும் பணிகள் சார்ந்த பள்ளிகளின் பள்ளி மேலாண்மைக் குழு (School Management Committee) வாயிலாக மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யப்படுகிறது.

www.Padasalai.Net

அப்பணி நிறைவடைந்த பின், பயனீட்டுச் சான்றிதழ் சார்ந்த நன்கொடையாளருக்கு அளிக்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

4. தற்போது Tied funds வாயிலாக பெறப்பட்ட நிதி பொருட்கள் கொள்முதல் செய்வதற்காக பள்ளி மேலாண்மைக் குழு (NSNOP - SNA) வங்கி கணக்கிற்கு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. பள்ளிகளின் பெயர் பட்டியல், கொள்முதல் செய்யப்படவேண்டிய பொருட்கள், அதற்காக நன்கொடையாக அளிக்கப்பட்ட தொகை சார்ந்த விவரங்கள் கீழே பட்டியலில் வழங்கப்பட்டுள்ளது.

| S.NO | DISTRICT NAME | NAME OF THE SCHOOL | Udise Number | ITEM | Amount |
|---|---|---|---|---|---|
| 1 | TIRUCHIRAPPALLI | PUPS, EDAMALAIPATTI PUDUR | 33150402401 | Smart Board | 165000 |
| 2 | CHENNAI (EXT. GCC) | PUPS Kannaginagar | 33031401910 | Smart Board | 165000 |
| 3 | CHENNAI (EXT. GCC) | PUPS Kannaginagar | 33031401910 | Bench for Students (2 and 4) | 10000 |
| 4 | CHENNAI (EXT. GCC) | PUPS Okkiyamthuraipakkam | 33031401901 | Smart Board | 165000 |
| 5 | TIRUPPUR | PUPS,IDUVAMPALAYAM | 33332201802 | Smart Board | 165000 |
| 6 | TIRUPPUR | PUPS,POOLUVAPATTI | 33332201210 | Smart Board | 165000 |
| 7 | KANCHEEPURAM | P.U.P.S , Kundrathur Mixed . | 33030507401 | Smart Board | 165000 |
| **TOTAL** | | | | | **1000000** |

| S.No | DISTRICT NAME | SCHOOL NAME | UDISE NO | ITEM NAME | AMOUNT |
|---|---|---|---|---|---|
| 1 | TIRUVANNAMALAI | PUPS THANDRAMPET | 33061707903 | Printer | 9311 |
| 2 | COIMBATORE | PUPS THEETHIPALAYAM | 33120601501 | Printer | 9311 |
| 3 | COIMBATORE | PUPS MATHAMPATTI | 33120601402 | Printer | 9311 |
| 4 | COIMBATORE | PUPS ANAMALAI | 33120701301 | Printer | 9311 |
| 5 | COIMBATORE | MPS KATOOR | 33121702001 | Printer | 9311 |
| 6 | COIMBATORE | PUPS KULATHUPALAYAM | 33121700101 | Printer | 9311 |
| **TOTAL** | | | | | 55866 |

www.Padasalai.Net

5. மேலே பட்டியலில் 6 மாவட்டங்களிலுள்ள 12 பள்ளிகளிலும் NSNOP - SNA வங்கி கணக்கு துவங்கப்பட்டு KIT ACTIVATE செய்யப்பட்டுள்ளது. மேலும், 30.04.2024 க்குள் சார்ந்த பள்ளிகளின் பள்ளி மேலாண்மைக் குழு (School Management Committee) வாயிலாக பெறப்பட்ட நிதி பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு முழுவதுமாக செலவினம் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்திட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

6. மேலும், பணிகள் மேற்கொள்ளப்பட்ட புகைப்படங்கள், (முன் மற்றும் பின்) கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களின் புகைப்படங்கள் மற்றும் பற்று சீட்டுகளின் புகைப்படங்கள் பள்ளி மேலாண்மைக் குழு செயலியில் உடனடியாக பதிவேற்றம் செய்திடவும், கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களை பள்ளியின் NSNOP Stock Register இல் பதிவு செய்திடவும், பயன்பாட்டு சான்றிதழ் மாவட்ட திட்ட அலுவலகதில் சமர்ப்பித்திடவும் சார்ந்த தலைமை ஆசிரியர்களை அறிவுறுத்திட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

7. பார்வை 3 இல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி செலவினம் மேற்கொள்ள தக்க அறிவுரைகளை சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு வழங்கிடவும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளபடுகிறார்கள்.

MEMBER SECRETARY
NAMMA SCHOOL FOUNDATION
Samagra Shiksha Campus
Department of School Education
DPI Campus, College Road,
Chennai - 600 006.

உறுப்பினர் செயலாளர்

பெறுநர்:

முதன்மைக் கல்வி அலுவலர்,
சென்னை, திருச்சிராபள்ளி, திருப்பூர், காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்.

**நகல்:**

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலைக் கல்வி) - (முதன்மைக் கல்வி அலுவலர்கள் வழியாக தொடர் நடவடிக்கைக்காக)
2. சார்ந்த பள்ளியின் தலைமை ஆசிரியர் கள் (முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக).